11.2.2021
அசல் வழக்கு எண்:258-2017

வா.சா.2 குருசாமி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அவரது செலவில் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்துள்ளார் என்றால் சரிதான். நான் பிரதிவாதி நிறுவனத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். வருடம் எனக்க சரியாக ஞாபகமில்லை. பிரதிவாதி நிறுவனத்தில் வேலை பார்த்தது சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாதியின் தகப்பனாரும், எனது தகப்பனாரும் மற்றும் நானும், வாதியும் பிரதிவாதி நிறுவனத்தில் வேலை பார்த்ததால் பழக்கம். வாதி அவரது சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 செண்டு அளவிற்குள் இருக்கும். மதுரா கோர்ஸ் சொசைட்டி வாதியின் தகப்பனாருக்கு 101ம் நம்பர் மனையிடத்தை ஒதுக்கி இருந்தது என்றால் சரிதான். எந்த வருடம் வாதியின் தகப்பனாருக்கு 101ம் நம்பர் மனையிடம் ஒதுக்கப்பட்டது என்று ஞாபகமில்லை. 101ம் நம்பர் மனையிடத்தின் அளவு எவ்வளவு என்றால் 5 செண்டு. தாவா வழக்கு 400 சதுரஅடியை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனாருக்கு 6 ஆண்மக்கள், 2 பெண் மக்கள். வாதியின் தகப்பனார் ரெங்கசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரெங்கசாமி இறப்பதற்கு முன்பு உயில் ஆவணமோ, தான செட்டில்மெண்ட் ஆவணமோ எழுதி வைத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரெங்கசாமியின் சொத்துக்களை பொறுத்து அவரது மக்கள்களுக்கிடையே பாகபிரிவினை எதுவும் ஏற்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரெங்கசாமியின் மகன்களில் ஒருவரான வாதி மட்டுமே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மற்ற வாரிசுகள் இந்த வழக்கில் தரப்பினராக இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி இட்லிகடை வைத்துள்ளார். இட்லி கடையின் விஸ்தீரணம் 1 செண்டு இருக்கும். பிளாட் எண்.101க்கு மேற்கே வாதியின் இட்லி கடை உள்ளது. பிளாட் எண்101ல் கண்ட சொத்தை தவிர வாதியின் தகப்பனாருக்கு வேறு இடம் எதுவும் மதுரா கோர்ட்ஸ் சொசைட்டி ஒதுக்கீடு செய்யவில்லை என்றால் சரிதான். மதுரா கோர்ட்ஸ் சொசைட்டி பிரதிவாதி நிறுவனத்திற்கு ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து மதுரா கோர்ட்ஸ் சொசைட்டி பிரதிவாதி நிறுவனத்திற்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் கட்டுப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தினை சுவாதீனம் எடுக்க நீதிமன்றத்தின் மூலம் அமீனா தாவா சொத்திற்கு வந்தார் என்றால் சரிதான்.

சுவாதீனம் எடுப்பதை தடுப்பதற்காகத்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் வாதி சட்டத்திற்கு விரோதமாக தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் வாதி ஆக்கிரமிப்பு செய்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி அவரது பிராதில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியது இல்லை என்றால் சரியல்ல. 5.12.2017ம் தேதி கோவிந்தராஜன் என்பவர் தாவா சொத்திற்கு வந்து மிரட்டியது சம்மந்தமாக வாதி காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை இந்த வழக்குதான் தாக்கல் செய்துள்ளார். வாதி தாவா சொத்தை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.